**செ. கு. எண்**: 47 **நாள்**: 14.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.2.2013

காஞ்சிபுரம் மாவட்டம், சேமந்தாங்கல் கிராமம் அருகே 7.2.2013 அன்று சென்னையிலிருந்து காஞ்சிபுரம் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து கார் மீது மோதியதில், காரில் பயணம் செய்த கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரை சேர்ந்த திரு. சிட்டிபாபு மற்றும் திரு. ரவிச்சந்திரன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஆமணக்கத்ததோண்டி கிராமம் அருகே, 9.2.2013 அன்று ஜெயங்கொண்டம் - சிதம்பரம் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. சங்கர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த சிட்டிபாபு, ரவிச்சந்திரன் மற்றும் சங்கர் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், சேமந்தாங்கல் கிராமம் அருகே 7.2.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் ஐந்து நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**